**துணை ஆணையர் (மா.வ), சரகம் -3, சென்னை -3 அவர்களின் செயல்முறைகள்.**
**முன்னிலை - திரு. அ. லஷ்மிபதி, எம்.காம்.,எச்.டி.சி.எம்.,**
**இடம்- 5வது தளம், ஒருங்கிணைந்த வணிகவரி வளாகம், யானைக்கவுனி மேம்பாலச் சாலை, சென்னை-3.**

ந.க. 864 /2019/அ 1 நாள். 02.01.2020

பொருள் : பொதுப்பணிகள் - வணிக வரித்துறை - சென்னை (வடக்கு) கோட்டம் - துணை ஆணையர் (மா.வ), சரகம் - 3, சென்னை - 3 - அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2017-18 மூலம் நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களின் பதவியிடத்தில் பணிவரன்முறை செய்தல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை :
1. செயலாளர் / தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை 3 க.எண் 1327 / PSD – G1 /2019, நாள். 18.02.2019.
2. இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6 அவர்களின் ந.க. எண். 1612/2017/A2, நாள். 25.02.2019.
3. இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை - 6 அவர்களின் செயல்முறை ந.க. எண். 1011/ 2019/ அ1, நாள். 07.03.2019.

-------------

**ஆணை:**

பார்வை ஒன்றில் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2017-18-ம் ஆண்டு தொகுதி IV அடங்கிய தேர்வின் மூலம் கீழ்கண்ட இளநிலை உதவியாளர்கள் தேர்வுசெய்யப்பட்டு, பார்வை மூன்றில் காணும் இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் செய்யப்பட்டு, தனியாளர்களின் கல்வி தகுதி மற்றும் பணி அமர்வு தொடர்பான பிற சான்றுகள் சரிபார்க்கப்பட்டு கீழ்குறிப்பிட்ட நாட்களில் பணியில் சேர்ந்தனர்.

(2) மேலும் தனியாளர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்ய தமிழ்நாடு அமைச்சு பணியாளர்கள் விதி 32(அ)(1)-ன்படி கீழ்கண்ட தேதியில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகின்றது.

(3) மேற்படி தனியாளர்களுக்கு பணி வரன்முறையினைத் தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணிநிலையில் தகுதிகாண்பருவம்தொடங்குவதாகவும் ஆணையிடப்படுகின்றது.

| வ. எண் | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (2) | (3) | (4) |
| 1. | R. வெங்கடேஷ் | துணை ஆணையர் (மா.வ.) அலுவலகம், சரகம்-3, சென்னை-3 | 12.03.2019 மு.ப. | 12.03.2019 மு.ப. |
| 2. | P. சவுரிகிரேசன் | உதவி ஆணையர் (மா.வ) அலுவலகம், திருமுல்லைவாயல் வரிவிதிப்பு வட்டம் | 15.03.2019 மு.ப. | 15.03.2019 மு.ப. |
| 3. | S. புஷ்பராணி | உதவி ஆணையர் (மா.வ) அலுவலகம், சோழவரம் வரிவிதிப்பு வட்டம் | 14.03.2019 மு.ப. | 14.03.2019 மு.ப. |
| 4. | A. வெங்கடேஷ் | உதவி ஆணையர் (மா.வ.) அலுவலகம், ஆவடி வரிவிதிப்பு வட்டம், சென்னை-3 | 13.03.2019 மு.ப. | 13.03.2019 மு.ப. |

...2

(4) மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகின்றது.

(5) தகுதிகாண் பருவக்காலத்தில் மேற்படி தனியாளர்கள் கீழே குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகின்றது.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைகள்
2. துறைத்தேர்வுகள் - வணிகவரிகள் சட்டம் பாகம் I முதல் III
3. அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி.

(6) இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் மதுரை கிளைகளில் பணிநியமன ஆணைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

(7) மேற்கண்ட தனியாளர்கள், பணிவரன்முறை ஆணையினைத் தொடர்ந்து, இரண்டாவது மற்றும் அதற்குபிறகுமுள்ள வருடாந்திர ஊதிய உயர்வினை, தகுதிகாண் பருவம் முடித்தபிறகு பெற தகுதியுடையவர்களாவர்.

ஒம்/- அ. லஷ்மிபதி,
துணை ஆணையர் (மா.வ),
சரகம் - 3.

பெறுநர்
இளநிலை உதவியாளர்கள்.
சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் (மா.வ), அலுவலகம் மூலமாக

நகல் - தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை - 6.
2. இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை - 3.
3. இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை.

// உண்மை நகல் / உத்தரவின்படி//

மேலாளர்
2/1/20.
2/1/2020